1993 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு உட்பட எந்தவொரு இடத்திலும் தனியாக ஆட்டுப் பண்ணை அமைக்கத் தேவையான நிலங்களும் தண்ணீர் வசதியும் இதர வசதிகளும் இருக்குமேயானால் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, ஆட்டுப் பண்ணை ஆரம்பிக்கக்கூடிய சாத்தியக்கூறுகளைப் பற்றி அரசு ஆராயும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, ஆடு வளர்ப்பதற்கு கடன் பெறுகின்றவர்களுக்கு அதற்குரிய சான்றிதழ்கள் வழங்கக்கூடிய அதிகாரிகள் அந்த இடத்திற்கே வந்து வழங்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 377, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

377—

அரசு அல்லது உள்ளாட்சி நிருவாகத்தின் அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடங்கள்

*11684—திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அல்லது உள்ளாட்சி நிருவாகம் அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடத்தை அக்கட்டிடம் கட்டும்போதே கட்டுபவரின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் சென்னை மாநகராட்சிச் சட்டம் போன்ற சட்டங்களின் கீழ் அனுமதியில்லாத மற்றும் அனுமதிக்கு முரணாகக் கட்டப்படும் கட்டிடங்களின் மீது கட்டுமானம் நடந்து கொண்டு இருக்கும்போதே நடவடிக்கை எடுக்க வழிமுறைகள் உள்ளன. மேலும் அனுமதியில்லாத மற்றும் அனுமதிக்கு முரணாகக் கட்டப்படும் கட்டிடங்களின் மீது நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ல் வழிமுறைகள் உள்ளன. மேற்கண்ட கட்டிடங்கள் கட்டப்பட்டு வரும்போது, இச்சட்டத்தில் வேலை

நிறுத்த அறிவிப்பு அறிக்கை அளிக்கவும்; மேலும் கட்டிட அபிவிருத்தி செய்பவர் வேலை நிறுத்த அறிவிப்பு அறிக்கையின்படி நடக்கவில்லை என்றால் அதைத் தொடர்ந்து கட்டிட இடிப்பு அறிவிக்கை அளிக்கவும் வழிவகை உள்ளது.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமர மக்கள் பல சமயங்களில் உள்ளாட்சி நிர்வாகம் அல்லது அரசிடம் அனுமதி பெறாமல், அரசு நிலத்தில் அல்லது பட்டா நிலத்தில் வீடுகள் அல்லது கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். கட்டிடம் கட்ட ஆரம்பிக்கும் சமயம் அல்லது கட்டும்போது நடவடிக்கை எடுக்காமல், சில சமயங்களில் கட்டிடம் கட்டி முடிந்த பிறகு நிர்வாகம் காலம் கடந்து நடவடிக்கை எடுக்க ஆரம்பிக்கிறது. இதனால் ஆயிரக்கணக்கான, சில சமயங்களில் லட்சக்கணக்கான ரூபாய்களை மக்கள் இழக்க நேரிடுகிறது. சில சமயங்களில் கட்டிடம் முழுவதும் அகற்றப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் நிர்வாகத்திற்கும் குந்த நடவடிக்கை எடுக்க கணிசமான தொகையும் செலவாகிறது ஆகவே, மக்கள் பணத்தையும், நிர்வாகத்தின் மூலம் செலவழிக்கும் பணத்தையும், ஆக, இரண்டு செலவுகளையும் காப்பாற்றும் வகையில், அனுமதி பெறாமல் கட்டப்படும் . . . (மணியடிக்கப் பெற்றது).

முற்பகல் 11-00.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எச். எம். ராஜு: இரண்டு செலவுகளையும் காப்பாற்றும் வகையில், அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடத்தைக் கட்டிடம் ஆரம்பிக்கும் சமயத்திலேயே சட்டப்படி நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனுமதிக்கு முரணாகக் கட்டப்படும் கட்டிடங்களின் மீது கட்டுமானம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமயத்திலேயே நடவடிக்கையெடுக்க ஏராளமான வழிவகைகள் இருக்கின்றன என்று சொன்னேன். அந்த வகையில் தான், இருக்கின்ற சட்டத்தில் அதன்படி கட்டுமானம் அனுமதிக்கு முரணாகக் கட்டப்பட்டிருந்தால், கட்டப்பட்டுக் கொண்டிருக்கும்போதே நடவடிக்கையை நிர்வாகம் எடுத்துக் கொண்டிருக்கிறது. பல்வேறு சமயங்களிலே, ஏராளமான கட்டிடம் கட்டுபவர்கள்—அனுமதிக்கு முரணாகக் கட்டடுபவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையுத்தரவு பெற்று விடுகின்றார்கள். அப்படித் தடையுத்தரவு பெற்றிருக்கின்றபொழுது, சட்டத்திலுள்ள விதிகளைப் பார்க்கின்ற பொழுது, தடை

1993 ஏப்ரல் 16]

யுத்தரவு இருந்தால் அதுவும் நடவடிக்கை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அதையெல்லாம் போக்குகின்ற வகையில்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கட்டிடங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டப்படுவதற்காக வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின்படி பல குடியிருப்புக் கட்டிடம் கட்டுபவர்களிடமிருந்து ஈட்டுத் தொகை வசூல் செய்கின்றோம். அனுமதி அளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாக அந்தக் கட்டிடம் கட்டப்பட்டு இருக்குமேயானால் அந்த ஈட்டுத் தொகை திருப்பி அளிக்கப்பட மாட்டாது என்ற விதியும் இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், அப்படி அனுமதி இல்லாமல் கட்டப்படுகின்ற கட்டிடங்கள் மின்சார வாரியத்திற்கோ அல்லது குடிநீர் வழங்கல் வாரியத்திற்கோ செல்லுகின்ற பொழுது, திட்ட அனுமதி பெற்றிருந்தால்தான் அவர்களுக்குக் குடிநீர் இணைப்பும், மின்சார இணைப்பும் கொடுக்கப்பட வேண்டுமென்று ஏற்கனவே சட்டத்தில் விதிமுறை இருக்கின்ற காரணத்தினால் தற்போது இருக்கின்ற நிலையே போதுமானது என்று துறை கருதுகின்றது.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி பாமர மக்களின் பணம் அதிக அளவிற்கு விரயமாவதைத் தடுக்கும்பொருட்டு, மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் விளம்பரங்கள் மூலமாகவும், வானொலி, தொலைக்காட்சி மூலமாகவும் மக்களுக்கு அறிவுரை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதிக்கு முரணாகக் கட்டிடம் கட்டப்படுகின்றபொழுதே நிர்வாகத்தின் வழியாக ஷோகாஸ் நோட்டீஸ் அனுப்பப்படுகின்றது. அந்த முறை ஏற்கனவே சட்டத்தில் இருக்கின்ற காரணத்தினால் அந்த அறிவிக்கையே போதும் எனக் கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 378, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

378—

மலைக்குறவர் வகுப்பினரை ஆதிதிராவிடர் இனத்தில் சேர்த்தல்

*17147—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைக்குறவர் வகுப்பினரை ஆதிதிராவிடர் இனத்தில் சேர்க்கு ஆசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?